IslamHouse.com

# العشر الأواخر من رمضان وصلاة العيد

## ரமழானின் இறுதிப் பத்தின் சிறப்புகள், பெருநாள் தொழுகை

عنوان المادة

< تاميلية -தமிழ் >


Author's name

N.H.M.உஸாமா

اسم المؤلف

محمد أسامة نور الحمزة

Reviser's name:

முஹம்மத் அமீன்

مراجعة: محمد أمين

# ரமழானின் இறுதிப் பத்தின் சிறப்புகள், பெருநாள் தொழுகை.

# العشر الأواخر وصلاة العيد

( Tamil –தமிழ் – التاميلي )


الإعداد: محمد أسامة بن نور الحمزة

N.H.M.உஸாமா

بسم الله الرحمن الرحيم

# ரமழானின் இறுதிப் பத்தின் சிறப்புகள், பெருநாள் தொழுகை.

புகழனைத்தும் ஏக வல்லவனாம் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக.

நன்மைகளை பல மடங்காக்கித் தரும், 1000 மாதங்களை விட சிறந்த ஒரு இரவை தன்னகத்தே கொண்டுள்ள, ரமழானின் இறுதிப் பத்தின் சிறப்புகள் பற்றிய சில விடயங்களை சுருக்கமாக முன்வைக்கிறேன்.

இதனைக் கொண்டு அல்லாஹ் எமக்கு ஈருலகிலும் பிரயோசனமளிப்பானாக.

ராமழான் மாதத்தின் இறுதிப்பத்தில் வரக்கூடிய மகத்துவமான ஒரு இரவு தான் லைலதுல் கத்ருடைய இரவு .இதில் தான் குர்ஆன் அருளப்பட்டது . இவ்விரவு ஆயிரம் மாதங்களை விடவும் மேலானது.

அல்லாஹ் கூறுகிறான்:

قال الله تعالى: ﴿ لَيۡلَةُ ٱلۡقَدۡرِ خَيۡرٞ مِّنۡ أَلۡفِ شَهۡرٖ ٣ ﴾ القدر : 3

“கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக மேலானதாகும்.”

எனவே இவ்விரவை அடைந்துக் கொள்ள இறுதிப் பத்தின் ஆரம்பத்திலிருந்தே நபியவர்கள் தயாராவார்கள் .நல்லமல்கள் செய்வதில் மும்முரமாக ஈடுபடுவார்கள், .அதற்காக தம்மை அர்ப்பணித்து விடுவார்கள், .அதன் இரவுகளை அதிகமாக நல்லமல்கள் செய்வது கொண்டு உயிர்ப்பிப்பார்கள் .அதற்காக தம் குடும்பத்தினரையும் எழுப்பி விடுவார்கள் .

ஆயிஷா ரழியல்லஹு அன்ஹா அவர்களைத் தொட்டும் புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில்; நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதிப்பத்தில் நுழைந்து விட்டால் அந்த இரவை உயிர் பிக்கக் கூடியவராகவும், குடும்பத்தினர் களை விழிக்கச் சொல்பவராகவும், தனது வேஷ்டியை (சாரத்தை) இறுகக் கட்டிக் கொள்ளக் கூடியவராகவும் இருந்தார்கள்.

**குறிப்பு**: இரவை உயிர்ப் பித்தல் என்றால், இரவில் கண் விழித்து தொழல், குர்ஆன் ஓதல், பிரார்த்தனை புரிதல், பாவமன்னிப்புக் கோரல்

இஸ்லாம் காட்டித் தந்திருக்கும் திக்ருகளை ஓதுதல் போன்ற நல்லமல்களை திருப்திகரமாக செய்தலாகும்.

மேலும் நபியவர்கள் இக்கண்ணியம் மிக்க இரவை அடைந்து கொள்ள கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பார்கள் .

புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில்; நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது இறுதி மூச்சி வரை இறுதிப் பத்தில் இஃதிகாப் இருக்கக் கூடியவராக இருந்தார் என ஆயிஷா ரழியல்லஹு அன்ஹா அவர்களைத் தொட்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

.மேலும் இவ்விரவை இறுதிப் பத்தின் ஒற்றைப் படையான நாட்களில் தேடிக்கொள்ளுங்கள் என நபியவர்கள் கூறியுள்ளார்கள் .

நீங்கள் லைலதுல் கத்ர் இரவை ரமழானின் கடைசிப் பத்தில் ஒற்றையான இரவுகளில் தேடிக்கொள்ளுங்கள் என நபியவர்கள் கூறியுள்ளார்கள் .(புகாரி ,முஸ்லிம்)

மேலும் இவ்விரவுகளில் நின்று வணங்குவது மிகவும் விஷேசமான ஒரு விடயமாகும் .

நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டும் அபூஹுரைரா

ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: எவரொருவர் ஈமான் கொண்டு, நன்மையை எதிர் பார்த்தவராக லைலதுல் கத்ர் இரவில் நின்று வாணங்குகிறாரோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்படும்.” நூல்: புகாரி, முஸ்லிம்.

இந்த நாட்களில் வீசும் காற்றை விட வேகமாக நபியவர்கள் தர்மம் செய்துள்ளார்கள் என ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன. .

மேலும் லைலதுல் கத்ர் இதுதான் என அறிந்துகொண்டால் நாம் கீழ் வரும் துஆவை ஓதிக்கொள்ள வேண்டும்.

اللّٰهُمَّ إنك عفو تحب العفو فاعف عني

அல்லாஹ்வே நிச்சயமாக நீ மன்னிப்பவன் மன்னிப்பை விரும்புபவன்.

லைலதுல் கத்ர் இரவின் அடையாளங்கள்:

- லைலதுல் கத்ர் இரவு எனக்குக் காட்டப்பட்டது .பின்பு அது எனக்கு மறக்கடிக்கப் பட்டது நான் அந்த இரவில் தண்ணீரிலும் ,களிமண்ணிலும் சுஜூது செய்யக் கண்டேன் என நபியவர்கள் கூறினார்கள். . (நூல்:புகாரி ,முஸ்லிம் )

- லைலதுல் கத்ரின் காலைப் பொழுதில் சூரியன் ஒளியிழந்து உதிக்கும் என நபியவர்கள் கூறினார்கள். .(நூல் :திர்மிதி )

- லைலதுல் கத்ர் கடுமையான சூடோ, கடுமையான குளிரோ இன்றி அமைதியும், சாந்தமும் கொண்டதாக இருக்கும் .அந்த இரவை அடுத்து வரும், காலைப் பொழுதில் சூரியன் இளம் சிவப்பு நிறத்தை உடையதாக இருக்கும் என நபியவர்கள் கூறினார்கள் .நூல்: சஹீஹுல் ஜாமிஉஸ்ஸஃர்.

## ➢ ஸகாதுல் பித்ர் (நோன்புப் பெருநாள் தர்மம்)

இது வசதியுள்ளவர்கள் மீது கடமையாக்கப் பட்டுள்ள போதிலும், முஸ்லிமான ஆண்கள், பெண்கள், பெரியவர், சிறியவர், அடிமை, ஆகிய அனைவர் மீதும் இந்த தர்மத்தை கொடுக்கும் படி நபியவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

இதன் நோக்கம்: நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும், ஏழை எளியவர்கள் பெருநாள் தினத்தின் போது பசி, பட்டினியுடன் இருக்கக் கூடாது என்பதுமாகும்.

நோன்பாளியிடமிருந்து ஏற்பட்ட வீணான தவறுகளிலிருந்து அவரைத் தூய்மைப் படுத்து வதற்காகவும் ஏழைகளுக்கு உணவாகவும்

இருக்கும் பொருட்டு நபியவர்கள் நோன்புப் பெருநாள் தர்மத்தைக் கடமையாக்கினார்கள் (நூல் :அபூதாவுத் ,இப்னுமாஜா )

இது ஒவ்வொரு நாட்டினதும் பிரதான உணவாகப் பயன்படும் பொருளிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். நமது நாட்டில் அரிசி கோதுமை போன்றன பிரதான உணவாக இருப்பதால் அதை நாம் கொடுக்க வேண்டும். ஒரு தலைக்கு 2kg 300g என்ற அடிப்படையில் இதனை அளவிடல் வேண்டும். அத்துடன் இதனை பெருநாளைக்குப் பிறை கண்டதன் பின்னர், பெருநாள் தொழுகைக்கு முன்னர் நிறைவேற்றுவது ஏற்றமாகும், ஓரிரு நாளைக்கு முன்னும் கொடுக்கலாம்.

குறிப்பு: இதனை பெருநாள் தொழுகைக்கு முன் நிறைவேற்றினால் தான் ஸதகத்துல் பித்ரை நிறைவேற்றிய நன்மை கிடைக்கும். இல்லாவிடில் சாதாரண ஸதகாவுக்குரிய நன்மையே அவருக்குக் கிடைக்கும்.

## ➢ பெருநாள் தொழுகை

நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரு பெருநாட்களிலும் சிறப்புத் தொழுகை இரண்டு ரக்அத்கள் திடலில் தொழுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே இரு பெருநாள் தொழுகைகளையும் திடலில் தொழுவது மிகவும் சிறந்தது.

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளிலும், ஹஜ்ஜுப் பெருநாளிலும் முஸல்லாவுக்கு (திடலுக்குச்) செல்பவர்களாக இருந்தனர். என அபூஸயீத் அல்குத்ரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நூல்கள்: புஹாரி, முஸ்லிம்

அத்துடன் பெருநாள் தொழுகையில் பெண்கள் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும். மேலும் மாதவிடாய் ஏற்பட்ட பெண்களும் திடலுக்கு வர வேண்டும். அவர்கள் தொழுகையைத் தவிர மற்ற நல்ல காரியங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

இரு பெருநாட்களிலும் மாதவிடாய்ப் பெண்களை யும் வீட்டில் இருக்கின்ற கன்னிப் பெண்களையும் (தொழும் திடலுக்கு) அனுப்புமாறும், அப்பெண்கள் வீட்டிலிருந்து வெளியாகி முஸ்லிம்கள் தொழுகின்ற இடத்திற்குச் சென்று அவர்களுடைய துஆவில் கலந்து கொள்ளுமாறும், தொழுமிடத்தை விட்டு மாதவிடாய்ப் பெண்கள் ஒதுங்கியிருக்குமாறும் நாங்கள் கட்டளையிடப்பட்டோம். பெண்களில் ஒருவர், “அல்லாஹ்வின் தூதரே! எங்களில் எவருக்கேனும் அணிந்து கொள்வதற்கு மேலாடை இல்லை எனில் என்ன செய்வது?” என்றார். அதற்கு, “அவளுடைய தோழி தனது (உபரியான) மேலாடையை

இவளுக்கு அணியக் கொடுக்கட்டும்” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உம்மு அதிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்குரார்கள். நூல்கள்: புஹாரி, முஸ்லிம்

மேலும் பெருநாள் தொழுகைக்காகத் திடலுக்குச் செல்லும் போது ஒரு வழியில் சென்று வேறு வழியாகத் திரும்புவது நபிவழியாகும். ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்குறார்கள்: பெருநாள் வந்து விட்டால் நபி (ஸல்) அவர்கள் (போவதற்கும் வருவதற் கும்) பாதையை மாற்றிக் கொள்வார்கள்.

நூல்: புஹாரி

இன்னும் நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் சாப்பிட்டு விட்டு தொழச் செல்வார்கள். சில பேரீச்சம் பழங்களை உண்ணாமல் நோன்புப் பெருநாளில் (தொழுகைக்கு) நபி (ஸல்) அவர்கள் புறப்பட மாட்டார்கள் என அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நூல்: புஹாரி

எனவே இவற்றோடு இன்னும் பல நன்மையான காரியங்களில் நேரத்தைப் பயன்படுத்தி நன்மை

களை அதிகப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எனவே இந்த இறுதி நாட்களை நபியவர்கள் காட்டித் தந்த அடிப்படையில் சரியாகப் பயன் படுத்திக் கொள்ள நம் அனைவருக்கும் அல்லாஹ் தவ்பீக் செய்வானாக.

அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் கிளையார் தோழர்கள் மீதும் உண்டாவதாக!.

முற்றும்.